## தமிழ்மொழி கற்போம் வாரீர் !

**3.6.12 100 சொற்களில் கருத்து விளக்கக் கட்டுரை எழுதுவர்**

நடவடிக்கை : 1. கொடுக்கப்பட்ட குறிப்புகளை வாசித்தல்.

2. விளக்கக் கட்டுரையை நிறைவு செய்தல்.

1. கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு கட்டத்தை நிறைவு செய்க.

### சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வழிகள்

நம்மைச் சுற்றியுள்ள உயிருள்ள ______ உயிரற்ற பொருள்களையும் நாம் சுற்றுச்சூழல் என்கிறோம் . ஒரு மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கு சுற்றுச்சூழல் பெரும் பங்கு வகிக்கின்றது. ______ மாசுபடுத்துவதால் அனைவருக்கும் தீமைகளே விளைகின்றன. ஆதலால், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் பல வழிகளைக் கையாளலாம்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் முதலில் சுற்றுச்சூழலை ______ வேண்டும். ஆகவே, சுற்றுச்சூழலை நேசித்தல் தொடர்பான கருத்தரங்குகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆகியவற்றை அதிகப்படுத்தலாம். பள்ளிகளிலும் அலுவலகங்களிலும் சிறு குழுக்களை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் தொடர்பான ______ நடத்தலாம். இதனால், அனைவரும் சுற்றுசூழலை நேசித்து வாழக் கற்றுக் கொள்வார்கள்.

அடுத்து, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் ______ நடத்தலாம். கல்வி நிறுவனங்கள் சுற்றுச்சூழல் கல்வி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு முறைகள் ஆகியவற்றை ______ கற்றுத்தர வேண்டியது மிகவும் அவசியமாகும். இதன்வழி, மாணவர்கள் சிறு வயதிலிருந்தே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் ______ தெரிந்து கொள்வார்கள். நாம் வாழ்கின்ற சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் நெகிழிப் ______ தவிர்க்க வேண்டும். கடைகளுக்குச் சென்று பொருள் வாங்கும்போது நெகிழிப் பைகளை வாங்கிப் பயன்படுத்துவதைத் ______ நல்லது. மேலும், மரங்களை அழிப்பதையும் முற்றாக நிறுத்த வேண்டும். மரங்களை அழிப்பதால் காற்றிலிருந்து கிடைக்கும் உயிர்வளியின் அளவு குறைந்து வருகிறது. ஆதலால், நமக்குத் தேவையான உயிர்வளியைப் பெற வேண்டுமாயின் ______ நடுவதை ஊக்குவிக்க வேண்டும்.

தொடர்ந்து அரசாங்கம் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். குப்பைகளைக் கண்ட இடங்களில் வீசுதல் கூடாது என்பதை வலியுறுத்த வேண்டும். அதையும் மீறி குப்பைகளை ______ தகுந்த தண்டனைகளை அளிக்க வேண்டும். இதன்வழி, சுற்றுச்சூழலைப் ______ ஆரோக்கியமான வாழ்க்கையையும் வாழ முடியும்.

எனவே, ஒவ்வொரு தனிமனிதனும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க பொறுப்புடன் செயல்பட்டால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும் என்பது திண்ணம். நாமும் 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பழமொழிக்கேற்ப நோயின்றி வாழலாம்.

| | | | |
|---|---|---|---|
| மாணவர்களுக்குக் | போதனைகளை | நேசிக்க | முறைகளைத் |
| தவிர்த்துவிடுவது | பொருள்களையும் | பயன்பாட்டைத் | நடவடிக்கைகளை |
| சுற்றுச்சூழலை | வீசுபவர்களுக்குத் | பாதுகாப்பதுடன் | மரக்கன்றுகள் |

*http://t.me/learntamilbyparamesvariperisamy*

LIVEWORKSHEETS